சுதந்திரன்
SUTANTIRAN
விலை சதம் 35
வள்ளுவர் ஆண்டு 2008 ற, ஆகிர்பிறை 9 | பங்குனி 17(30-3-77) புதன் | புத்தகம் 31 | இதழ் 98

# இரண்டு கிழமைவரை எதுவும் சொல்ல முடியாது!



யாழ் மருத்துவ மனையில் 16ம் வார்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் உடல்நிலை குறித்து இரண்டு கிழமைவரை தம்மால் தீர்க்கமாக எந்த முடிவும்கூற முடியாதிருப்பதாக மூளைநரம்பு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். தந்தை செல்வாவின் உடல் நிலையில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென்று தாம் பூரண திருப்தி தெரிவிக்கமுடியாத நிலையிலுள்ள அதே சமயம், நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் கூறுவதற்கில்லையென்று டாக்டர்கள் மேலும் தெரிவித்தனர்.

## தந்தை செல்வா உடல்நிலைகுறிதது மருத்துவ நிபுணர்கள் அபிப்பிராயம்!

மூதறிஞர் செல்வா விபத்துக்குள்ளாகி இன்றுடன் எட்டு நாட்களாகியும் அவருக்கு பூரண அறிவு திரும்பவில்லை. ஆயினும் முன்னேற்றமான அறிகுறிகள் நாள்தோறும் தென்படுகின்றன.

சத்திர சிகிச்சைக்குட் படுத்தப்பட்ட பின்னர் குளிரூட்டப்பட்ட அறையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மூதறிஞர் செல்வா அவர்களை யாரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. யாழ் மருத்துவமனை டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் அனைவரும் மிகவும் சுறுசுறுப்புடனும், அக்கறையுடனும் தந்தை செல்வாவை கண்ணின் மணிபோலக் கவனித்து வருகின்றனர், டாக்டர்கள், கனகராசா, சிவஞானவேல், நற்குணம் உட்பட பல டாக்டர்கள் தந்தையை உடனிருந்து கவனித்து வருகின்றனர்.

## இடையிடையேகண்விழித்துபார்த்தார் எனினும் பூரண அறிவு திருமபவில்லை!

தந்தை செல்வாவுக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர்கப்ரால், கடந்த சனிக்கிழமை காலையில் கொழும்பிலிருந்து சென்று, இரண்டாவது தடவையாக தந்தை செல்வாவை பார்வையிட்டு. அவரது உடல் நிலை சீரடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவித்தார். செல்வாவின் வயதும், அதனுல் அவருக்குள்ள பலவீனமுமே அவரை விரைவில் நினைவு திரும்பவிடாமல் தடுக்கின்றன என்றும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

கண்டி மருத்துவ மனையில் பணியாற்றும் மூளை நரம்புச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சுப்பிரமணியமும் யாழ்ப்பாணம் —4-ம் பக்கம் பார்க்க

## மூதறிஞர்செல்வாவுக்குநாளை 79 வயது பூர்த்தியாகிறது!

### நாடு முழுவதும் விசேட பிரார்த்தனைகள்!

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கு நாளை (31-3-77) வியாழக்கிழமை எழுபத்தியொன்பது வயது பூர்த்தியாகிறது. நாளையிலிருந்து 80வது வயதில் காலடி எடுத்து வைக்கும் மூதறிஞருக்கு உடல் வலிமையையும் நீடித்த ஆயுளையும் தேகாரோக்கியத்தையும் வழங்குமாறு இறைவனைப் பிரார்த்தித்து நாடு முழுவதிலுமுள்ள இந்து, கிறித்தவ கோவில்களிலும், முஸ்லிம் பள்ளி வாசல்களிலும் விசேட பிரார்த்தனைகளும் ஆராதனைகளும், பூசைகளும் நடைபெறுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள், தமிழ் இளைஞர் பேரவை கிளைகள், தமிழ் மகளிர் பேரவைக் கிளைகள் ஆகியன தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் ஆங்காங்கு உள்ள ஒவ்வோர் ஆலயத்திலும் விசேட பூசை, ஆராதனை, பிரார்த்தனை ஆகியவற்றுக்கு ஒழுங்கு செய்துள்ளன. அரசியல் சார்பில்லாத பொது இயக்கங்களும் இதில் ஈடுபடவிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தி லுள்ள பிரசித்திபெற்ற கோவில்கள் அனைத்திலும் தந்தையின் பெயரால் பூசைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. மட்டக்களப்பிலும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேடபூசையொன்றை அங்குள்ள த. இ. பேரவை கிளை நடத்துகிறது.

திருகோணமலையில் கோணேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை நடத்த திருகோணமலை த. வி. கூ. கிளை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பிலும் த. இ. பேரவை த.ம. பேரவை, தமிழர் விடுதலை கூட்டணி, மொழிவழித்தொழிற் சங்கங்கள் ஆகியன கூட்டாக வெள்ளவத்தை சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்தில் அபிஷேகம், பூசை, பிரார்த்தனை ஆகியவற்றை நடத்துகின்றன.

தோட்டப்பகுதிகளில் உள்ள கோவில்களிலும் விசேட பூசைகள் நடத்துமாறு இ. தொ. கழகப் பொதுச்செயலாளர் திரு. மு. பரராசசிங்கம் கழகக் கிளைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சுடர் விழா ஒத்திவைப்பு

தமிழர் தந்தை செல்வா அவர்களின் சுகவீனம் காரணமாக 3-4-77 ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்றத்தினுல் நடத்தவிருந்த முத்தமிழ் விழா பின்போடப்பட்டுள்ளது.

---

முன்னேஸ்வர ஆலயத்தில் இப்போது நடைபெறும் சண்டிகா மகாயாகத்திலும் தந்தையின் நலன்வேண்டி விசேட பூசை இடம்பெற்றது.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத் தந்தை செல்வா

**கலங்கி நிற்கும் தமிழர்க்கின்று கலங்கரை விளக்கமாய் துலங்குகின்ற தூயமூர்த்தி தநதை செல்வநாயகம் அவர்கட் குநாளைய தினம்(31-3-77) வயது 79. இந்த வயதை எம்முள் எத்தனை பேர் எட்டிப்பிடிக்க முடியும் என்பது எம்மை எதிர்நோக்கும் முதற்கேள்வி. அப்படி இந்த வயதை நாம் அடைவோம் என்று வைத்துக்கொள் வோமாயினும் அந்த வாழ்வு எவ்வளவு தூரம் எமக்கும் எம்சமுதாயத்திற்கும் பயனுடையதாக இருக்கப்போகிறதென்பது அடுத்து எழும் கேள்வி யாகும். இறைவன் அருளால் தந்தை செல்வாவின் வாழ்வு நீண்ட வாழ்வாய் விளங்குவதோடு பயனு டைய வாழ்வாய் பைந்தமிழர்க்கு வாழ்வளிக்கும் வாழ்வாய் விளங்குகிறது.**

உலகில் பெருமக்கள் சிலர் நீண்ட வாழ்வு வாழ்ந் ததுண்டு. ஆனல் அவர்கள் சிலரின் இறுதிக்கால வாழ்வு ஓய்வுபெற்ற காலமாகவோ மற்றவர்களுக்குப் பயன் பல தராத வாழ்வாகவோ அமைந்து விடுவதும் உண்டு. ஏன் சிலரின் வாழ்வு "May have out lived thier usefulness (தம் பயன்பாட்டை மிஞ்சி வாழ்ந்துவிட்டார்கள்) என்ற குற்றத்திற்கே கூடச் சிலர் ஆளாகியிருப்பதும் உண்டு. ஆனல் தந்தை செல் வாவின் வாழ்வு அத்தகைய வாழ்வு அல்ல.

தந்தை செல்வாவிற்கு வயது செல்லச் செல்ல உட லில் தளர்ச்சி ஏற்பட்டுள் ளது. நடையில் தள்ளாடும் தன்மை தெரிகிறது. கை கால்களில் நடுக்கம் காணப் படுகின்றது. ஒரு குச்சியின் வடிவில் காட்சியளிக்கிருர். இவை யெல்லாம் அவரின் வெளித்தோற்றம்: அவரின் உடல் தளர்ந்துள்ளது உண்மை. ஆனல் அவரின் உள்ளம் எஃகுபோல் உறுதி யாய் இறுக்கமாய் இருக்கி றது. நடையிலே தள்ளாடும் தன்மை உண்டு. ஆனல் அவர்கொண்ட கொள்கை யில் தள்ளாடும் தன்மை யைக் காணவில்லை. அவரின் கைகால்கள் நடுங்குகின்றன. ஆனல் அவரின் குறிக்கோ ளில் இலட்சியத்தில் எத்த கைய நடுக்கமும் தென்பட வில்லை.

எம்முட்பலரிடம் உறுதி யான உடற்கட்டுண்டு. நடையிலே கம்பீரம் உண்டு. ஆனல்கொள்கையிலோ நடுக் கம் உண்டு. இதன்விளைவாற் ருன் எம்மினம் நலிவுற்று வாடி வதங்குகிறது. 79 வயது நிரம்பிய கிழவனுக்கு இருக்கும் நடுக்கமில்லாக் கொள்கையை நடுங்காத கைகள் நடுங்காத உடல் உறுதி படைத்த நாம் ஏன் பெறவில்லை என்பதுதான் எம்மை எதிர்நோக்கும் பெருங்கேள்வி. காந்தியிடம் ஜின்னவிடம் காணப்பட்ட அதே உடற்தளர்ச்சி அதே குச்சிவடிவம் செல்வாவிடம் காணப்படுகிறது. ஆனல் அவர்களிடம் காணப்பட்ட கொள்கை உறுதி இவரிட மும் குடிகொண்டிருப்பதி ஞல் இவர் தன் வாழ்நாளி லேயே தன் இலட்சியத்தை அடைவது உறுதி என்ற நம் பிக்கை எமக்குண்டு.

இன்றும் இனம் தன்நிலை கெட்டு விடுதலை தவறிப் பாழ்பட்டுக்கிடப்பதற்கு பல காரணங்கள் கூறலாம். எனினும் மூன்று காரணங் கள் முக்கியத்துவமுடைய தாகத் தோன்றுகின்றன. ஒன்று எம்மீது எமக்கு நம் பிக்கையில்லை மற்றையது ஒரு குறிக்கோளுடன் வாழ விரும்பாததன்மை. இவை அனைத்திற்கும் மேலாக நாம் இந்நாட்டிற்கு உரிய மூத்த குடி மக்கள் என்ற வர லாற்று உணர்வு பெருத மனப்பான்மை. எம்மை அழிவிற்கு இட்டுச்செல்லும் இப்பண்புகளில் இருந்து எம்மை விடுவிக்கத் தந்தை செல்வா உறுதிபூண்டுள் ளார்.

எந்தவொரு இனமும் இவ் வுலகில் தலையெடுக்க வேண்டுமெனில் முதலில் அவ்வினத்திற்குத் தன்நம் பிக்கை வேண்டுமென்று கூறும் தந்தை அவர்கள் Faith can move mountains (நம்பிக்கை மலைகளையே அசைக்க முடியும்) என்ற விவிலிய கூற்றை அடிக்கடி எமக்கு நினைவுபடுத்து வதுண்டு. உலகில் தோன் றிய நாம என்ருே ஒருநாள் சாகப்போவது உறுதி, ஏன் இந்த வாழ்வை ஒரு குறிக் கோளுடைய வாழ்வாக ஆக்கி மற்றவர்களுக்குப் பயன்பட வாழ்ந்து மறை யக்கூடாது? என்பது அவர் பலதடவை கூறிய அறிவு ரையாகும். ஒரு இனம் விடு

**ஈழவேந்தன்**

தலைபெற்ற இனமாக வாழ வேண்டின் முதலில் அவ்வி னம் தான் வாழும் நாடு தனக்குரித்துடையது என்ப தில் முழு நம்பிக்கைவைக்க வேண்டும்.


இதற்கு அடிப்படைத் தேவை வரலாற்று உணர்வு, இதை ஈழம் வாழ் தமிழர் போதியளவு உணரவில்லை என்று எண்ணி அடிக்கடி கவலையுறுபவர் நம் தந்தை அவர்கள். சிங்கப்பூரி லேயோ, மலேசியாவிலோ பிஜித்தீவிலோ, மொரிசியஸ் தீவிலோ தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடி வெற்றி பெறுவது கடினம். காரணம் தமிழர்களுக்கு அந்நாடுகளில் வரலாற்று உரிமை (Historic right) இல்லை. ஆனல் இலங்கை யைப் பொறுத்தவரை தமி ழர்கள் அப்படிக்கருதமுடி யாது. சிங்களவர்கள் இந் நாட்டுக்கு வருகைதரும் முன்பே தமிழர்கள் இந் நாட்டை ஆண்டார்கள். இந்நாட்டில் வாழ்ந்தார்கள் என்பதற்கு வரலாற்றுக் குறிப்புகள் உண்டு. இதை நாம் எம்மக்களிடை உணர்த்த வேண்டும் என்று அவர் ஒருமுறை கூறியதுஎம் நெஞ்சில் ஆழமாகப் பதிய வேண்டிய கருத்தாகும்.

நாயிலும் கீழாய் நம் தமிழ் மக்கள் நலிவாகத் தான் கண்டு ஓயுதல் இன்றி உழைத்து உருக் குலைந்து காட்சியளிக்கும் நம் தந்தை அவர்கள் எம் இனம் விடு தலையை நாடி நிற்கும் இன மாக விளங்க வேண்டின் முதலில் தூய்மையுற்றுத் துலங்க வேண்டும் என்று கூறுவார். மாசுபடிந்த இனத்திற்கு மறுமலர்ச் சியோ மறுவாழ்வோ இல்லை என்பது அவரின் [illegible] நம்பிக்கை எம்[illegible] அடிக்கடி தலைதூக்கும் சாதி வெறியைச் சாகடிக்க சொல் லளவோடு நில்லாது செய லிற்காட்டிய தந்தையின் செயல்கள் பல.

சாதிவெறியைச் சாடிய எம் செல்வா அவர்கள் ஈழத் தமிழரிடை இடைக்கிடை தலைதூக்கும் மாகாண வெறிக்கும் நல்ல தலையடி கொடுத்தவர்வடக்குகிழக்கு மலைநாடு என்ற நிலை நீங்கி நாம் தமிழர், எமது மொழி தமிழ் எமது பண்பாடு தமிழ்ப் பண்பாடு, எமது நாகரிகம் தமிழர் நாகரிகம் என்ற இனிமை மிக்க குரல் எழுச்சி மிக்க குரல் தமிழ் இன உணர்வை ஊட்டும் குரல் இன்று எங்கும் கேட் கிற தென்ருல் அது தந்தை யாற்றிய பணியின் வெற்றி யென்பதை எவர்தான் மறுக்க முடியும். இத்தகைய இன ஒற்றுமையை இன உணர்வை இவருக்கு முன்பு எந்த ஒரு தலைவனும் இந் நாட்டில் நிலைநாட்டிய தில்லை

தன்னைத் தமிழ் மக்கள் தம்மை வாழ்விக்கவந்த தமிழ்த் தெய்வமாக வழுத்தி வாழ்த்திய போதும் எல்லைமீறிப் புகழ்மாலைபாடி பூமாலை சூடியபோதும் அவ ரிடம் நான் என்ற அகந்தை மருந்தளவும் தலைகாட்டிய தில்லை. மக்களுக்காகத் தானேயன்றி தனக்காக மக்கள் அல்ல என்ற கோட் பாட்டில் ஊறித்திளைத்தவர் நம் தந்தை அவர்கள். தனி மனிதன் ஒருவன் எவ்வளவு பெரியவனுய் இருப்பினும் தவறு செய்யக்கூடும் ஆகவே தனி மனிதன் வழி பாட்டைத் தவிர்த்து கொள்கை வழிபாட்டில் மூழ்கித் திளையுங்கள் என்று அவர் பல கூட்டங்களில் வலியுறுத்திவருவது அவரின் தன்னடக்கத்தையும், கொள்கைப் பற்றையும் பாருக்குப் பறைசாற்றுகின் றது.

தந்தைக்கு தமிழ் மக்கள் தம் அன்பு மிகுதியால் சூட் டிய பட்டங்கள் பல அவற் றுள் ஒன்று மூதறிஞர் என் பதாகும். மூதறிஞர் என்பது முன்கூட்டி உணர்பவர் என்ற பொதிந்த பொருளை உணர்த்திநிற்கும் இச் சொல்லின் பொருளுக் கமைய இன்று நேற்றல்ல அன்றே தமிழ் இனத்திற்கு இன்று ஏற்படக்கூடிய பேரின்னல்கள் அனைத்தை யும் வரிசைப்படுத்திக் கூறி யவர் மட்டுமல்ல அவற்றின் அடிப்படைக் காரணங்களை யும் உணர்த்தியவர் இப் பேரின்னல்களில் இருந்து நாம் விடுபட வழியும் காட் டியவர். நோய்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப் பச்செயல் என்பது வள்ளு வர் மருத்துவத் துறையில் கூறிய கருத்தெனினும் அது அரசியற்றுறைக்கும் பொருந்தும்.



தந்தை செல்வாவுடன் கட்டுரையாளர். தந்தை செல்வா அவர்கள் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்படு வதற்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரை இது.

இம்முறையில் தமிழ் இனத்தின் அரசியல் நோயைக்கண்டு மருந்து கொள்ள அரசியல் மருத்து வர் நம் செல்வா அவர்கள்.

ஒரு இனம் ஆளும் இனமா கவும் மற்றைய இனம் ஆளப்படும் இனமாகவும் இருப்பின் இத்தகைய நோய்கள் அடிக்கடி ஏற் பட்டே தீரும். இதற்குரிய ஒரே மருந்து நிலையானபாது காப்பு அளிக்கும் மருந்து — ஒவ்வோரு இனமும் தம் மைத்தாம் ஆளவேண்டும். "சிங்கள இனம் தன்னை ஆள வேண்டும் தமிழ் இனம் தன்னை ஆளவேண்டும். ஒரு இனத்தை மற்று ஒரு இனம் ஆளமுயன் ருல் ஆளுகின்ற இனத்திற்கு சிக்கல், ஆளப்படுகின்ற இனத் திற்குத் தொல்லை. இதைத் தவிர்ப்பது இரு இனங்களுக்கும் நன்மை அளிக்கும்." இவ்வி தம் அருமையான கருத்துக் களை எவர் உள்ளமும் புண் படாது தந்து இன்று ஈழத் தில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலுக்குத் தீர்வுகாண தந்தை செல்வா முயல் கிருர். தந்தை செல்வாவின் வாழ்நாளிலேயே இச்சிக்கல் தீர சிங்கள மக்களிடையும் சிங்களத் தலைவர்களிடை யும் நல்ல மனமாற்றம் ஏற் படின் இம்முடிவினுல் கூடிய நன்மை பெறுபவர்கள் எம் சிங்கள நண்பர்களேயாவர். ஆனல் இம்முடிவை தந்தை செல்வா மறைந்தபின்பு தான்தீர்க்கவேண்டும் என்று சிங்கள நண்பர்கள் முடிவுசெய்யின் நாம் அதைத்தடுக்க முடியாது. ஆனல் அப்படி எடுக்கப் படும் முடிவு உறுதியாக நம் சிங்கள நண்பர்களுக்கு நன்மை செய்யுமா என்பது ஏக்கம்நிறைந்த கேள்வியா கவே விளங்குகிறது.

தந்தைசெல்லாவின்அன்பு வழியில் அறவழியில் நிற் கும் நாம் சிங்கள நண்பர்க ளின் நல்வாழ்வில் நாட்ட முடையவர்களாய் இருப் பதை எவரும் தடுக்கமாட் டார்கள் என்று நம்புவோ மாக. செல்வாவின் சிந்தனை செந்தமிழ் இனத்தை மட் டும் அல்ல சிங்கள இனத் தையும் வாழ்விக்கும் என் பதை எல்லோரும் உணர் தல் நலம்.

## கொக்குவிலில் கூட்டணி பிரசாரக்கூட்டம்

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் 19-3-77 சனிக்கிழமை மாலை 7 மணியளவில் கொக்குவில், கோண்டாவில் தமிழர் விடு தலைக் கூட்டணியினதும், இளைஞர் பேரவையினதும் காலம் சென்ற அமரர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ.சி., மு. திருச்செல்வம் கியூ.சி. அவர்களுக்கு அஞ் சலி செலுத்துமுகமாகவும், இளைஞர் எழுச்சிக் கூட்ட மாகவும் திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை (ராம கிருஷ்ணுஸ்) அவர்களின் தலை மையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற் றது. சிறை மீண்ட கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவைசேனுதி ராசா, பொன். சத்தியசீலன் உரையாற்றினுர். தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் கள் திரு. மு. ஆலாலசுந்த ரம், இ. விஸ்வநாதன், அ. அமிர்தலிங்கம், மகளிர் பேரவை திருமதி. மங்கை யற்கரசி அமிர்தலிங்கம் மற் றும் கொக்குவிலைச்சேர்ந்த பல இளைஞர்கள் உரையாற் றினர்.

தலைவர் தமது உரையில் கொக்குவில், கோண்டாவில் இளைஞர்களும், பொதுமக்க ளும், பெண்களுமாக பெருந் தொகையினர் கூட்டத்திற்கு சமூகம் கொடுத்துள்ளது அக் கிராமத்தில் இருந்து தெரிந் தெடுக்கப்பட்டு பாராளுமன் றம் சென்றவர் தமிழினத் திற்குச் செய்த துரோகத் திற்கு எதிர்ப்புத் தெரிவிப்ப தாக உள்ளதெனக் கூறினுர். கொக்குவில், இளைஞர்களும், பொதுமக்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் விடு தலைப் போராட்டத்தில் இறங்கத் தயாராக இருப்ப தாகவும், ஐந்தாம் படையி னரின் வலையின் சிக்கி கூட் டணியின் ஐக்கியத்தை உடைக்க எவரும் இடங் கொடுக்கக்கூடாதெனவும் எச்சரித்தார்.

திரு. ஆ. மு. ஆலாலசுந்த ரம் பேசும்போது காலம் சென்ற தலைவர்கள் ஆற்றிய சேவையையும் அவர்கள் கனவு நனவாக, அவர்கள் விட்ட பணியைத் தொடர் ந்து நடாத்தி "ஈழத்தமிழ கம்" அமைப்பதே தமிழ் மக்கள் அவர்கட்குச் செய் யக்கூடிய கைமாறு எனத் தெரிவித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது கொக்குவில் கோண்டாவில் மக்கள் கடந்தகால பிழைகளை உணர் ந்து தமிழர் விடுதலைக்கூட்ட ணியின் கீழ், காலம் சென்ற தலைவர்களின் வழிகளைப் பின்பற்றி உதயசூரியன் கொடியின் கீழ் தமிழர் விடு தலைக்கூட்டணியின் கீழ் "ஈழத்தமிழகம்" அமைக்க ஒன்று சேர்ந்திருப்பதைக் காண மகிழ்வதாகக்கூறினுர். இரு தலைவர்களினது கடந்த கால சரித்திரத்தையும் அவர்களின் சாதனையையும் மிகவும் தெளிவுபட விளக் கினுர்.

கவிஞர் காசி ஆனந்தன் பேசும்போது தனது மட்டக் களப்புப்பேச்சிற்குவேறுவித மகுடம் சூட்டி அதற்கு கால், கை, தலை, வால் எல் லாம் வைத்து சில பத்திரி கைகளில் செய்தி வெளிவந் ததையிட்டு துக்கம் தெரிவித் தார். விடுதலை இயக்கத்தில் உள்ளவர்கள் தூய்மையாக வும், தீவிரமாகவும் இயங்க வேண்டுமென்பதே தமது கருத்தெனத்தெரிவித்தார்.

வண்ணை ஆனந்தன் பேசும் போது தமிழ் இளைஞர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி யின் பக்கபலமாகவும் அவர் கள் தீவிரமாகவும் இயங்க ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டுமெனவும் வற்புறுத் தினுர்.

பொன். சத்தியசீலன் பேசும்போது மாணவர்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அமைந்த பின்னும் கட்சிக் கொக்கரிப்பு ஏன்?

**இன்று தமிழன் கேட்பது ஒன்றே ஒன்று. அது விடுதலை — தன்னிடமிருந்து அபகரிக்கப்பட்ட தமிழீழ அரசை மீள்விப்பது. அது நீதியின் பாற்பட்டது அதை மறுப்பது அநீதி. அநீதியை எதிர்த்து நீதியை நிலைநாட்டுவது தமிழினத்தின் தலையாய கடமை. பெரும்பாலான தமிழர்கள் இதை உணர்ந்து விட்டார்கள். இதன் விளைவுதான் தமிழர் விடுதலைக்கூட்டணி.**

இந்நிலையிலே — அதாவது சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோசலிச, தமிழீழ அரசை அமைப்பது என்ற ஒரே ஒரு இலட்சியத்தைத் தமிழர் கைக்கொண்டு அதை அடைய முற்பட்ட பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்கள் அனைவரும் ஒரே கொள்கை உடையவர்கள் அன்றோ? ஒரே கொள்கையின் கீழ் முழுதாக ஒன்றுபட்ட பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவரில் சிலர் இன்னும் கட்சி கட்டிச் செயற்படுவது அனுவசியம். கொள்கை ஒன்றான பின் இரண்டு பெயர்ப்பலகைகள் என்? இன்னும் சொல்லப் போனால், பழைய கட்சிப் பெயர்களை வைத்துச்செயல்படுவது, சில சமயம் அனர்த்தத்தையும் விளைவிக்கக் கூடும் — இரண்டு கட்சிகள் ஒன்றுபட்டுத் தொழிற்படும் போது, மாற்றார் அவற்றைப் பிளவுபடுத்த ஒருமுறையல்ல, இருமுறையல்ல, பலமுறையும் பலவகையாலும், பாடுபடுவர். இதுபற்றி பிரிக்கத் தேவையில்லை.

இப்பொழுது இன்றியமையாத இலட்சியம் விடுதலை; தமிழர்கள் ஈடுபட்டிருப்பது விடுதலைப்போர். இதற்காகத் தமிழர் விடுதலைக்கூட்டணியில் ஒன்று திரண்டு எழுந்து விட்டார்கள். தியாகஞ்செய்யத் தீர்மானித்து விட்டார்கள். ஏன், எத்தனையோ பேர் தியாகஞ்செய்து கொண்டே இருக்கிறார்கள். இந்தக் கட்டத்திலே, பதவி மோகத்துக்கோ போட்டிக்கோ, பொறாமைக்கோ சூழ்ச்சிகளுக்கோ இங்கே இடம் இல்லை. எனவே தமிழரசுக் கட்சியென்றோ, தமிழ் காங்கிரஸ் என்றோ செயல்பட வேண்டிய அவசியமே இல்லை. விடுதலைபெறும் வரைக்கும் தமிழ் அணி ஒன்றே ஒன்றுதான். அது தான் தமிழர் விடுதலைக் கூட்டணி; இப்பெயர் பொருத்தமற்றது என்று கருதமுடியாது. இது விடுதலைபெறத் துடிக்கும் தமிழர்களின் கூட்டணி.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகளையும் அதன் இரு கரங்களாகிய இளைஞர் பேரவை, மகளிர் பேரவைக் கிளைகளையும், ஈழம் எங்கும் அமைக்கின்ற பொழுது, அவை அவைக் கேற்ற பாரங்களில் பெயர், விலாசம் முதலிய விபரங்களைப் பெற்று அங்கத்தவர்களைச் சேர்க்கின்றோம். இந்தக் கிளைகளில் சேர்ந்து செயல்படுபவர்களில் பலர் தமிழரசுக் கட்சியிலோ தமிழ் காங்கிரஸ் கட்சியிலோ ஏற்கனவே அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கத்தவர்களான பின் பழைய கட்சிகளில் தொடர்ந்தும் இருப்பதாயின், தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கத்தவர்களாவதில் அர்த்தமில்லை. பழைய கட்சிகளே தங்கள் தங்கள் அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்து செயல்பட முற்படலாமே. இது பற்றி ஆழச் சிந்தித்தால் "பழைய குருடி கதவைத் திறவடி" என்பதைவிட வேறொன்றுஞ் சொல்லஎனக்குத் தெரியவில்லை.

என் உடன் பிறப்புக்களே, இன்று ஈழத்தில் வாழுந் தமிழர்கள் அனைவரும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைகள். இலங்கையில் இரண்டாந்தரப் பிரசைகள். சிறீலங்கா எனும் சிங்களச் சிறைவாசிகள். சுதந்திரத்தைப் பறி கொடுத்து, தன் மானங் கெட்டு, தறுதலைகள் கைப்பட்டு, வாழ வழியின்றிப் பாழ்பட்டு நிற்கின்றோம். இந்நிலை இன்னும் நீடிக்கவிட நாம் மானமற்ற மாமிசப் பிண்டங்களா?

வேண்டாம் இனியும் கட்சி வேற்றுமை! அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டும் தமிழர்க்குச் செய்த சேவைகள் மறக்கற்பாலன அல்ல. அவை எங்கள் சரித்திரத்தில் பொன்னால் பொறிக்கப்படவேண்டியவை. நன்றி மறவாத் தமிழினம் அதைச் செய்யாமல் விடாது. இன்று நாம் வேண்டுவது இரண்டறக் கலந்த, முற்றிலும் ஒன்றுபட்ட ஒற்றுமையே, காலக்கிரமத்தில் சங்கமம் ஆவோம் என்று காத்திருக்க நேரமில்லை; பொறுத்திருக்கப் பொழுதில்லை. தாமதம் வேண்டாம். இன்றே ஒன்றுவோம். தீவிரமாய்ச் செயல்படுவோம். எண்பத்தோராம் ஆண்டில் எடுத்தடி வைக்க வேண்டும் சுதந்திரத் தமிழ் ஈழத்தில்.

ஆனைமுகன்

## தந்தை செல்வா பெயரில் கொழும்பில் விசேட பூசை

தமிழ் ஈழத் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களுக்கு பூரண சுகம் வேண்டியும், நீண்ட ஆயுள் வேண்டியும் அவரது 80வது பிறந்த நாளாகிய இம்மாதம் 31ஆம் திகதி வியாழக்கிழமை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கொழும்பில் விஷேட அபிஷேகம், பூசை, ஆராதனை ஆகியவற்றை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது. அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். இந் நிகழ்ச்சிகளில் சகல மொழிவழித் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தோரும், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக் கிளை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

இது இவ்விதம் இருக்க, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க எழுது வினைஞர் சங்க கிளைகள் அனைத்தையும் தலைவர் செல்வாவின் பிறந்த நாளன்று (31.3.1977) தமிழர் கூட்டணியால் ஆங்காங்குள்ள கோவில்களில் நடாத்தப்படும் விசேட பூசைகள், ஆராதனைகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு தலைவரின் சுகத்துக்காக பிரார்த்தனை செய்யுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கணேசலிங்கம் பிரார்த்தனை

"தன்மானத் தமிழ் மணியாய், தமிழ் காக்கும் பெருமகனாய் உண்மானத்தோடு வாழும் உத்தமனே, ஒரு தமிழ்த் தலைவனே சொல்லும் பொருளும் சோர்விலா செல்வநாயகமே, தமிழ் தாயகமே, ஆண்டுகள் பலவற்றை அனுபவிதது்க் கழித்தீர்கள் ஈழத்தில் தமிழன் மானத்தோடு வாழத்தான் வேண்டுமென்ற மந்திரத்தால் தமிழ் மாதாவை அர்ச்சித்துக்கொண்டிருக்கும் உங்கள் உடலும் உள்ளமும் இன்னும் சேமத்தால் நீடிக்க வேண்டுமென்று அத்தனை தமிழ் மக்களும் அர்ச்சனை செய்கின்றனர்"

இவ்வாறு பட்டிருப்பு தொகுதி த. வி. கூ. பிரமுகர் பூ. கணேசலிங்கம் விடுத்துள்ள வாழ்த்து அறிக்கையில் கூறியுள்ளார்.

## செல்வா பிறந்தநாளில் நாடெங்கும் பிரார்த்தனை!

### அமிர் வேண்டுகோள்

தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரற்ற தலைவரும் தமிழ்ஈழத் தந்தையுமான திரு. செல்வநாயகம் அவர்கள் 79 வயது பூர்த்தியடைந்து 80வது வயதில் இம்மாதம் 31ம் திகதி பிரவேசிக்கின்றார். யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடும் நோய்வாய்ப்பட்டு மெல்ல மெல்ல சுய நினைவு பெற்று வரும் தந்தை விரைவில் பூரண குணமடைந்து தமிழினத்தை விடுதலைப் பாதையில் நடாத்திச்செல்ல ஆண்டவனுடைய கருணைவேண்டும் நாளாக அத்தினத்தை அனுட்டிக்குமாறு தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

ஆங்காங்குள்ள கோவில், தேவாலயம், பள்ளிவாசல் எங்கும் தந்தை விரைவில் குணம்பெறப் பிரார்த்தனை செய்வதோடு, அவரின் இலட்சியங்களை மக்கள் மத்தியில் விளக்குவதற்கும், அவற்றுக்காக உழைக்கவும் இத்தினத்தில் உறுதிபூணுவோமாக.

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் செய்தி ஏடுகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மகளிர் போவை பிரார்த்தனை!

"இறைவா வாராது வந்துதித்த மாமணியாம் எம் தந்தை செல்வாவை காப்பாற்று என்று நாம் விடும் பெருமூச்சு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முறை இறைவனை இறைஞ்சுவோமாக; பல லட்சம் மக்களின் வேதனைபோக்க சீக்கிரம் குணப்பட்டு எழும்பவேண்டும்."

தமிழ் மகளிர் பேரவை திருகோணமலை கிளையின் சார்பில் பிலோமினா லோரன்ஸ் விடுத்த பிரார்த்தனை செய்தியில் கூறியுள்ளார்.

## விழா ஒத்திவைப்பு

ஏப்பிரல் மாதம் 2ம் நாள் கொழும்பு மாநகரில் கோலாகலமாகக் கொண்டாடப் படவிருந்த மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் 80வது பிறந்த நாள் விழா ஒத்திவைக்கப் பட்டுள்ளது. தலைவர் செல்வாவின் உடல்நிலை சீரடைந்தபின்னர், விழாவிற்கான திகதி அறிவிக்கப்படும்.

## மகளிர் பிரார்த்தனை

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளை நடாத்தும் வாராந்தப்பிரார்த்தனை எதிர்வரும் 1-4-77 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு பம்பலப்பிட்டி சென் மேரிஸ் தேவாலயத்தில் இடம் பெறும்.

## மொரார்ஜிக்கு அமிர் வாழ்த்து!

"பாரதத்தின் பிரதமராக பதவியேற்ற உங்களை இலங்கை வாழ் தமிழர்கள் வாழ்த்தி மகிழ்கின்றனர். உங்கள் வெற்றி அரசியலில் ஜனநாயகத்திற்கும், நேர்மைக்கும் கிடைத்த பெருவெற்றியாகும். முன்னேற்றமும், பலமும் பொருந்திய பாதையில் பாரதத் திருநாட்டை வழி நடத்திச் செல்ல உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை தந்தருள இறைஞ்சுகிறோம்."

பாரதத்தின் புதிய பிரதமராக ஜனதாக் கட்சித் தலைவர் திரு. மொராஜி தேசாய் பதவியேற்றதைப் பாராட்டி இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அனுப்பிய தந்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஆண்டவா அருள்க!

— முருகு —

அண்ணலார் காந்தி சொன்ன அறவழியதனில் நின்றே
கண்ணெனத் தமிழர் போற்றும் தண்தமிழதனைக் காக்கும்
ஈழம்வாழ் தமிழர் போற்றும் தந்தையே செல்வா என்றும்
நீடிய ஆயுளோடு நலம்பெற வாழ்த்துகின்றோம்!

சாத்தீண் டாமையென்னும் கொடும்பிணி யகற்றியிங்கே
சமத்துவம் நிலவுகின்ற தமிழ்ச்சமு தாயம் காண; தன்
மென்னுடல் ஆவி ஆக்கம் அனைத்தையும் அர்ப்பணித்த
மென்னடை பயிலும் செல்வா பன்னெடுங் காலம்வாழ்க!

வளமொடு மண்ணில்வாழ வழியுனக் கிருந்தபோதும்
வளந்தரும் வாழ்வைநாடா தளப்பரும் இன்னலேற்று
வளமொடு தமிழர் வாழத் தமிழன்னை மீண்டும் ஆள
களம்பல கண்ட எங்கள் தந்தையே செல்வா வாழ்க!

'உரிமைகள் பெற்றுநீங்கள் வாழ்கின்ற வாழ்வைப் போலெம்
உரிமைகள் பெற்றுநாமும் வாழ்ந்திடத் தடை செய்யாதீர்"
என்று நீ இலங்கை ஆட்சி பீடத்தைக்கேட்கும் கேள்வி
வென்றிடும் காலமோர் நாள் வந்திடும்; வாழ்த்துகின்றோம்!!

கண்ணுள்ளே ஆடுகின்ற கருமணியனைய செல்வா; நின்
எண்ணத்திற் கொண்டநல்ல கொள்கைகள் வெல்லவேண்டி
நீண்ட நல்லாயுள் பெற்று மண்ணில் நீ வாழ வேண்டி
"ஆண்டவா அருள்க" என்று வேண்டுதல் செய்கின்றோமே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# இதய மலர்களால் அர்ச்சிக்கிறோம்! இறைவா கொஞ்சம் கருணை காட்டு!!

**யா**ழ் மருத்துவ மனையில் அந்தப் புனிதத் திருமேனி 'அறிதுயில்' கொள்ளும் அந்தப் பதினாறும் நம்பர் அறையை—இரண்டு நாட்களாக தாயைத் தேடித் திரியும் சேய்போல சுற்றிச் சுற்றி வந்துவிட்டு இதை எழுதுகிறேன்—

ஒவ்வொரு முறையும் டாக்டர்கள் அந்த அறைக்குள்ளே சென்றுவிட்டுத் திரும்பும் போதெல்லாம்— அவர்களது வாயிலிருந்து இனிக்கும் சேதி வாராதோ— எங்கள் கவலை தீராதோ— என்கிற இதயத் துடிப்பு—

தமிழர் தலைமகன் வாய்திறந்தார்— தங்சத் தமிழை உச்சரித்தார் — என்று அவர்கள் கூறவேண்டும் என்கிற ஆர்வப்பெருக்கு!

இறைவா கருணை காட்டாயோ— எங்கள் தந்தையை மீட்காயோ— இனத்தின் துயர் தனைப் போக்காயோ— இதயத்தின் அழுகுரல் கேட்காயோ— என்று ஆண்டவனை நோக்கி மானசீகமான பிரார்த்தனை!

குளிரூட்டப்பட்ட அந்த அறைக்குள் மூதறிஞர் செல்வா படுத்திருக்கிறார்!

இராமன் இருக்குமிடமே அயோத்தி என்பார்கள்—

தந்தை செல்வா இன்று குடி இருக்கும் அந்த வைத்தியசாலையின் குறித்த 16ம் இலக்க அறையே இன்றைக்கு நமது இயக்கக் கண்மணிகளுக்கு அயோத்தியாக காட்சி தருகிறது.

எந்த நேரமும் அந்த அறையின் முன்னால் மக்கள் வெள்ளம்!

அவர்களது கண்களிலே மௌனம் நிறைந்த கவலை! இதயத்திலே ஏக்கம்!

தந்தை செல்வாவின் திருமுகத்தை யாரும் அருகே சென்று பார்க்க முடியாது! இது டாக்டர்களின் அன்புக் கட்டளை!

ஆனாலும் புனிதமான இடத்துக்கு செல்லும் பக்தர்களைப்போல— பவித்திரமான அந்தத் தூய தலைவன் படுத்திருக்கும் அந்த அறையை சுற்றிச் சுற்றி வருவதிலே— அந்த அறை வாசலிலேயே அமர்ந்திருப்பதிலே—ஒரு ஆத்மீக் திருப்தி! மனச்சுமை நீங்குவது போன்ற உணர்வு!

அந்த உணர்வுடன் சென்ற சனியும் ஞாயிறும் தந்தையின் உதட்டசைவு காண்பதற்காக அங்கேயே குடியிருந்தேன்!

நான் மட்டுமா? நல்ல உள்ளங்கள் பல அங்கே உள்ளூர விம்மி வெடித்து அழுது கொண்டிருக்கின்றன.

யாழகமும், தேனகமும், மலையகமும் மன்னாரும், திருமலையும், வன்னித் திருநாடும் இணைந்து ஓர் உருவமாகி அங்கே கண்ணீர் வடிக்கின்றன!

இந்த இணைப்பை தன்னுடைய இடைவிடா உழைப்பினால் ஏற்படுத்தியவர் அவர்!

சாதி பேதங்களை— மத வேறுபாடுகளை கடந்து தமிழர்கள் அங்கே தந்தை செல்வாவின் நலன் வேண்டிப் பிரார்த்தனை செய்கிறார்கள்—

இந்த ஒற்றுமை ஏற்படுவதற்கு மூலவித்தாக விளங்கியவர் அவர்!

நாடிழந்து, மொழியிழந்து, நாதியற்ற இனமாய் நலிந்திருந்த ஈழத் தமிழினத்தை தட்டியெழுப்பி— தடுமாற்றம் போக்கி— நேரிய பாதையை காட்டி— முப்பதாண்டுகளுக்கு மேலாக மூச்சு விடாமல் உழைத்துவந்த அத் தூய திருவுருவம் கண்களை மூடியபடி தமிழினத்தின் எதிர்காலம்பற்றி அங்கே கனவு கண்டுகொண்டிருக்கிறது!

கண்ணை இமை காப்பதுபோல்— கன்னித் தமிழணங்கை இமயம்போற் காத்துநிற்கும் எங்கள் பெரியவர்—அங்கே கண்களை மூடிய படி கடும்தவம் இருக்கிறார்!

தமிழனின் அறிவுக் கண்ணைத் திறந்து— அடிமை உணர்வை மாய்த்து—கெடுதல்கள் போக்கிட, வேண்டும்நமக்கு விடுதலை என வீர முழக்கமிட்டு வந்த வீரத்தின் திருவுருவம் அங்கே தனது ஆத்மீகப் பலத்தை பரீட்சித்துக் கொண்டிருக்கிறார்!

அரசியலில் முக்காலமுமுணர்ந்த அந்த மூதறிஞர் பெருமகன் — பொற்காலம் கண்டிடப் புறப்பட்ட பேரறிஞர் — தந்தை செல்வா அங்கே தம்மை அடக்கித் தவஞ்செய்து வருகின்றார்!

இயக்கம் கண்டு— இருபத்தைந்து ஆண்டு காலமாக அதை வளர்த்து—இனியில்லைப்பயம் —இருக்கின்றார் எம் இளம்பிள்ளைகள் — இளங்காளைகள்—அன்னவர் கண்டிடுவர் பொன்னிகர் தமிழ் ஈழம் என்ற எண்ணத்துடன் அந்தப் பொன்னவிர் மேனிப்பெரியவர் அறிதுயில் கொள்ளுகிறார்.

தள்ளாத வயதிலும்—ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்த நம் அருமைத்தலைவர் செல்வா அவர்கள் கடந்த எட்டு நாட்களாக சற்று ஓய்வெடுத்து வருகிறார்!

அவர் நினைவு இழந்துவிட்டார் என்கிறார்கள்!

நினைவு இழந்திருந்த நமக்கெல்லாம் நினைவு ஊட்டியவர் அவர்! அவருக்கா நினைவு தப்பும்?

அவர் இன்னும் அறிவு பெறவில்லையென்கிறார்கள்!

நமக்கெல்லாம் அறிவூட்டிய ஒளிவிளக்கு அவர் — அவருக்கா அறிவு தப்பும்?

வெளித்தோற்றத்திலே அவர் நினைவு இழந்தவராக — அறிவு தப்பியவராக காணப்பட்டபோதிலும் — உள்ளே அவரது உள்ளொளி—அதாவது அவரது ஆத்மீக சக்தி— (will power) வலிமையுடன் இயங்கிக்கொண்டேயிருக்கும்!

மூக்குத் துவாரத்தினால் அவருக்கு உணவூட்டிக்கொண்டிருக்கிறார்கள்— ஆனால் வெறும் காற்றையே உணவாக உட்கொண்டு பலகாலம் வாழக்கூடிய தவ வலிமை மிக்கவர் அவர்!

போராட்டம் அவருக்குப் பிடித்தமான ஒன்று;போராடவே பிறந்தவர் அவர்! என்றும் போராடிக்கொண்டேயிருப்பவர் அவர்!

எந்தப்போராட்டத்திலும் இறுதிவெற்றியை அவரே இதுவரைபெற்று வந்திருப்பதை உலகு அறியும்!

இந்த இறுதிப் போராட்டத்திலும் வெற்றி அவருக்குத்தான்!

அல்ல அல்ல —அவருக்கல்ல — வெற்றி நமக்குத்தான்!

ஏனெனில் அவர் உயிர் வாழ்வது அவருக்காக அல்லவே! எமக்காகத்தானே!

அவரை எப்படியும் வாழவைத்து தமிழ் சமுதாயத்தின் கண்ணீரைத்துடைப்போமென டாக்டர்கள் பலர் ஓய்வு ஒழிச்சலின்றி 24மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

யாழ் மருத்துவமனை தாதிமார்கள் — பட்டுப் பூச்சி போல பறந்து பறந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

உணவும், ஓய்வும் உறங்கலும் பின்னர்— உத்தமத் தலைவனின் உயிர் காப்பதே முதலில் —என்று ஓடியாடிப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்!

வைத்தியமனைச் சிப்பந்திகள் விறுவிறுப்புடன் பணியாற்றுகிறார்கள்!

தாயகத்தின் தலைவரை—தமிழ் ஈழத்தின் முதல்வரை— காக்கின்ற புனிதப் பணியிலே ஈடுபட்டுள்ள அவர்கள் ஒவ்வொருவரையும் தமிழினம் கையெடுத்து வணங்குகிறது!

இறைவனே! எல்லாம் வல்ல ஒருவனே! எங்கும் நிறைந்த மாசக்தியே!

நாளையதினம் நம் தலைவருக்கு 79 வயது நிறைவு பெறுகிறது— 80வது வயதில் காலடி எடுத்து வைக்கிறார்!

அவரைப் படைத்து— எம் துயர் துடைக்க அனுப்பிவைத்த பரம் பொருளே! கொஞ்சம் கருணைகாட்டு!

நாளையுடனாவது எம்மைச் சோதிப்பதை நிறுத்திவிடு!

எம் நாயகனுக்கு நீடித்த ஆயுளும், உடல் வலிவும், தெம்பும் திராணியும் கொடுத்திடு!

அவர் சிரித்தால்தான் தமிழ் ஈழம் சிரிக்கும்!

அவர் எழுந்தால்தான் தமிழ் ஈழமும் சிலிர்த்தெழும்!

ஈழத்தமிழினத்தை தாங்கிநிற்கும் இமயம் அவர்! அவர்போன்ற வேறொரு இமயம் எம்மிடம் இல்லையென்பது உனக்குத் தெரியாததல்ல!

இறைவா உன்னைப் பிரார்த்திக்கிறோம்—

இதய மலர்களால் உன்திருவடிகளை அர்ச்சிக்கிறோம்'

எங்கள் தந்தையை இன்னும் பல்லாண்டு வாழவைப்பாய்!

அவருக்குப் புதிய தெம்பும் வலிவும் சேர்த்திடுவாய்!

இதுவே எமது இடைவிடாப் பிரார்த்தனை!

—கோவை மகேசன்

## இரண்டு கிழமை வரை எதுவும்...

—1-ம் பக்கத் தொடர்

வந்துமூதறிஞர்தந்தைசெல்வாவை கவனித்து வருகிறார். இவரைவிட, கொழும்பிலிருந்து வந்த டாக்டர் மண்டலேஸ்வரனும், டாக்டர் பாரிகுமாரகுலசிங்கமும் தந்தை செல்வாவைப் பார்வையிட்டனர்.

தந்தை செல்வாவுக்கு திரவபதார்த்தமான உணவு செலுத்தப்பட்டு வருகிறது. அந்த உணவை அவரது உடம்பு ஏற்றுக்கொள்ளுகிறது.

இருதயத்துடிப்பு, நாடித்துடிப்பு, சிறுநீரகம் அனைத்தும் சீராக இயங்குகின்றன.

சென்றசனிக்கிழமை காலையில் இருந்த விக்கல் சிகிச்சையின் பின்னர் சீராகிவிட்டது.

அவரது உடம்பில்தொடும்போது, அதை அவர் இப்போது உணர்ந்துகொள்ளுகிறார்.

கால் கைகளை சில சமயங்களில் அசைக்கிறார்.

கண்களையும் விழித்து மூடுகிறார். எனினும் நினைவு இன்னும் பூரணமாகத் திரும்பவில்லை. அரைவாசி அறிவு நிலையில் (half consciousness) அவர் இருந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையின்படி அவரது உயிருக்கு தற்போது ஆபத்து இல்லையென்று தெரிவிக்கப்பட்டது

27-3-77 இரவு ஞாயிறு இரவு முழங்காலைத்தாமாகவே மடித்து நீட்டினார்.

தினமும் பல நூற்றுக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தின் நானுதிசைகளிலுமிருந்து வந்து தந்தையின் உடல் நலம் குறித்து விசாரித்துச் செல்கின்றனர். குறிப்பு ஏட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரமுகர்கள்

## கொக்குவிலில் கூட்...

பேரவை, இப்போ இளைஞர் பேரவையோடு சேர்ந்து இயங்குவதாகவும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமெனவும் அவர்களோடு எல்லா இயக்கங்களும் ஒன்றுசேர வேண்டுமெனவும் வற்புறுத்தினார்.

மற்றும் திரு. இ. விஸ்வநாதன், திரு. பொ. மதிமுகராசா, திரு. க. வர்ணகுலசிங்கம் திரு. இ. சுப்பிரமணியம் மாவை சேனாதிராசா உட்படப் பலர் பேசினர்.

## 'இன்டிப்பென்டன்ற்' ஆசிரியர் பேசுகிறார்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையினர் நடத்தும் இன்றைய (30-3-77) வாராந்தக் கருத்தரங்கில் 'இன்டிப்பென்டன்ற்' ஆசிரியர் திரு. றெஜி மைக்கல் "இலங்கையில் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்கள்" எனும் தலைப்பில் உரையாற்றுகிறார். பம்பலப்பிட்டி லோறிஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் இக கருத்தரங்குக்கு திரு. ஈழவேந்தன் தலைமை தாங்குகிறார். சட்டத்தரணி கரிகாலனும் பேசுவார்.

'திருக்குறள் மணிகள்'
(பொருட்பால்)
15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் மார்ச் மாதம் 30-ந் தேதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org